1973 நவம்பர் 19]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அங்கே உரத் தொழிற்சாலை தொடங்கப் படுவதற்கு முன்னாலேயே இந்தத் தொழிற்சாலைகள் அங்கே உருவாக வேண்டு மென்ற முறையிலே நாம் அறிக்கைகள் தயாரித்து அந்தப் பகுதி மக்களோடு கலந்து பேசி அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

New Industries for Tiruchirappalli.

* 171 *Q.*— THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any survey has been undertaken by the Government to examine the scope of industrial growth in and around Tiruchirappalli district in 1973 ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) சென்னையிலுள்ள சிறுதொழில்கள் பணிக்கழகம் 1972 ஆம் ஆண்டு நவம்பர்-டிசம்பர் மாதங்களில் திருச்சி மாவட் டத்தில் தீவிர ஆய்வுக்கான முன் ஆய்வு செய்தது.

(ஆ) ஆய்வு அறிக்கை இன்னும் வரைவு நிலையில் இருக்கிறது.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, கொதிகலன் தொழிற்சாலை அருகில் அனல் மின் நிலையம் அமைக்கும் உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அனல் மின் நிலையம் அங்கே இல்லை. தூத்துக்குடியில் அண்மையில் அனல் நிலையம் தரப்பட்டிருக்கிறது.

சிறு தொழில்கள் துவக்க விதிவிலக்குகள்

*** 172 வினா—திரு. கி. ஜெயராமன் :** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறுதொழில் வளருவதற்கு உதவுகின்ற முறையில் தொழிற்சாலைகள் அமைத்து நடத்துவதற்கு அனுமதி வழங்குகின்ற சட்டத்திலிருந்தும், விதி முறைகளிலிருந்தும் குறிப்பிட்ட முறைகளில் விதிவிலக்கு அளிக்க வேண்டு மென்று சேலம் மாவட்ட தொழில் நடத்த அனுமதி கொடுப்பதை துரிதப் படுத்த உதவும் கமிட்டியின் தீர்மானத்தின்மீது அரசு எடுத்துக்கொண்ட நடவ டிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மேற்கண்ட சேலம் மாவட்ட அனுமதி கொடுப்பதை துரிதப்படுத்த உதவும் குழுவின் தீர்மானத்தை தொழில் நடத்த நிர்வாக சீர்திருத்தக்குழு மற்ற தீர்மானங்களோடு பரிசீலித்து குறிப்பிட்ட சில சட்டத்திலிருந்தும், விதிமுறைகளிலிருந்தும் விதிவிலக்கு அளிக்க சிபாரிசு செய்துள்ளது. நிர்வாக சீர்திருத்தக் குழுவின் மேற்படி சிபாரிசுகளை அரசு ஒப்புக்கொண்டு அரசு ஆணை நிலை எண் 511 (தொழில்) தேதி 26—3—1973-ல் ஒருசில சிபாரிசுகளை செயலாக்க உத்தரவு பிறப்பித்துள்ளது.

கைவினைப் பொருள்கள் வளர்ச்சிக் கழகம்

* 173 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:
திரு. ரா. ரா. முனுசாமி: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கைவினைப் பொருட்களுக்காக கார்ப்பரேஷன் ஒன்று துவக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாடு கைவினைப் பொருள்கள் வளர்ச்சிக் கழகம் 1—8—1973-ம் தேதி பதிவு செய்யப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்தப் பதிவுக் கழகத்தைப் பதிவு செய்த பிறகு மேற்கொண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விபரம் அறியலாமா? அது எப்பொழுது செயல்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுதே செயல்படத் துவங்கியிருக்கிறது. இது சம்பந்தமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் அவர்கள் பணிகளைத் தொடங்க வேண்டுமென்றும், ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் அவர்களுடைய விற்பனைக் கூடத்தை அமைத்து, உற்பத்தியாகும் பொருள்களை வாங்கி விற்க வேண்டுமென்றும் அரசு முடிவெடுத்துள்ளது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, இந்த கார்ப்பரேஷனில் இருக்கும் அங்கத்தினர்கள் யார் யார்? அவர்கள் இதுவரையில் என்ன சிபாரிசுகளைச் செய்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுதுதான் போடப்பட்டிருக்கிறது. இது 'அட்டானமஸ் கார்ப்பரேஷன்' என்ற முறையிலே அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள். கீழ்க்கண்டவர்கள் அங்கத்தினர்கள் :—